**Kalanjiyam International Journal of Tamil Studies**
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
Issue DOI: https://doi.org/10.63300/kijts06022026
https://ngmtamil.in

# Cultural Evolution and Cultural Change in Thiruparankundram

**Vasanthi V[1*], Dr. Meenakshi V[2],**

[1]*Ph.D Research scholar (Full Time), (BDU 2210632780062) Department of Tamil -Bishop heber college (Autonomous)- (Affiliated to Bharathidasan University) – Tiruchirapalli,620017 – Tamilnadu – India.*

**ORCiD ID**: *https://orcid.org/0009-0002-4583-934*

[2]*Assistant professor- Department of Tamil - Bishop heber college (Autonomous)- (Affiliated to Bharathidasan University) – Tiruchirapalli,620017 -Tamilnadu-India-*

*EMail: mahizhnila@gmail.com, Mobile:9790382356*

**ORCiD ID**: *https://orcid.org/0000-0003-0537-1268*

[*]Corresponding Author EMail: yuvanbagyavasi@gmail.com Tel: Mobile:9578449790.

DOI: https://doi.org/10.63300/kijts06022026.01

**Article Info**

Received on 12-July-2026, Revised on 15-July-2026, Accepted on 15-July-2026, Published on 01-Aug-2026

## ABSTRACT

Thiruparankundram has been an important centre of worship from the Sangam period to the present day. During the Sangam age, it was primarily dedicated to Lord Murugan, as evidenced in the Paripāṭal literature. Over time, the site evolved into a multi-religious centre, accommodating the worship of deities such as Lord Shiva, Perumal, Vinayagar, and Goddess Durga. The worship traditions of Thiruparankundram also reflect the continuity and transformation of ancient religious practices, including nature worship, Vel (spear) worship, and image worship. Among these, Vel worship, one of the earliest forms of Murugan worship, continues today through annual religious festivals. Likewise, the ancient belief that worshipping Lord Murugan brings happiness and worldly benefits has evolved into the contemporary belief that He blesses devotees with obstacle-free marriages. Anthropologists identify such enduring traditions as cultural survivals, which represent remnants of earlier cultural practices preserved through time. This study employs the theories of cultural change and cultural survivals to examine the transformation, continuity, and sequential development of the worship traditions of Thiruparankundram based on the evidence presented in the Paripāṭal literature.

***KEYWORDS:*** *Thiruparankundram, Vel (spear) worship, cultural survivals, Murugan worship, cultural change.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

# திருப்பரங்குன்றம் பண்பாட்டுப் படிமலர்ச்சியும் பண்பாட்டு மாற்றமும்

[1]**வசந்தி. வே,** முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்), (BDU 2210632780062),
தமிழாய்வுத் துறை - பிஷப் ஹீபர் கல்லூரி, (தன்னாட்சி)
(பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது) – திருச்சிராப்பள்ளி -620017.
[2] **முனைவர் மீனாட்சி வீ.,** நெறியாளர், உதவிப் பேராசிரியர் - தமிழாய்வுத் துறை - பிஷப் ஹீபர் கல்லூரி, (தன்னாட்சி) - (பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது)
– திருச்சிராப்பள்ளி -620017.

**ஆய்வுச் சுருக்கம்**

திருப்பரங்குன்றம் சங்ககாலத்திலிருந்து இன்று வரை வழிபாட்டிற்குரிய இடமாகத் திகழ்கின்றது. திருப்பரங்குன்றமானது பல கோயில்களைக் கொண்டதாகவும், பல்வேறு தெய்வங்களுக்கு இருப்பிடமாகவும் காணப்படுகிறது. சங்ககாலத்தில் முருகனுக்குரிய வழிபாட்டு இடமாக இருந்த இக்குன்றம், பிற்காலத்தில் சிவன், பெருமாள், விநாயகர் மற்றும் துர்க்கை போன்ற தெய்வங்களுக்குரிய வழிபாட்டு இடமாகவும் மாற்றமடைந்துள்ளது. மேலும் திருப்பரங்குன்றத்தில் இயற்கை வழிபாடு, வேல் வழிபாடு மற்றும் உருவ வழிபாடு போன்ற வழிபாட்டு படிமலர்ச்சியும் காணப்படுகிறது. தொடக்கக் கால வழிபாட்டு முறையான வேல் வழிபாடு, இன்று குன்றின் மேல் முருகனுக்கு வேல் எடுக்கும் திருவிழாவாகத் தொடர்கிறது. அதுபோல் முருகனை வணங்கினால் இன்ப நுகர்ச்சியும், உலகியல் பயன்களையும் பெற முடியும் எனும் நம்பிக்கையானது, இன்று நடைமுறையில் தடையின்றி திருமணம் நடைபெற வேண்டும் என்று முருகனை வணங்கும் நம்பிக்கையாக இருக்கின்றது. இவ்வாறு தொடர்ந்து வந்து எச்சமாக வெளிப்படும் பண்பாட்டை எஞ்சி நிலைத்தவை என்று மானுடவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். பண்பாட்டு படிமலர்ச்சியில் இக்கோட்பாடு முதன்மையானதாகக் கருதப்படுகிறது. அவ்வகையில் பரிபாடல் இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு திருப்பரங்குன்ற வழிபாட்டில் ஏற்பட்ட மாற்றங்களையும் படிநிலை வளர்ச்சியையும் அறிந்து கொள்ள பண்பாட்டு மாற்றம் மற்றும் எஞ்சிநிலைத்தவை ஆகிய கோட்பாடுகள் துணை புரிகின்றன.

**திறவுச் சொற்கள்:**
திருப்பரங்குன்றம், வேல்வழிபாடு, எஞ்சி நிலைத்தவை, முருக வழிபாடு, பண்பாட்டு மாற்றம்

**முன்னுரை:**

தமிழ்ப் பண்பாட்டில் தெய்வம் குறித்தக் கருத்தாக்கம் முதன்மையானதாக விளங்குகின்றது. அத்தெய்வம் சார்ந்த வழிபாட்டு முறைகளும், நம்பிக்கைகளும் நெடுங்காலமாகத் தொடர்ந்து காணப்படுகின்றன. இயற்கையில் தொடங்கிய வழிபாட்டு முறை, உருவ வழிபாட்டு முறையாக வளர்ச்சியடைந்தது. இவ்வாறு வளர்ச்சியடைந்த உருவ வழிபாடானது பல்வேறு அரசியல் மாற்றம் மற்றும் சமய வளர்ச்சியின் காரணமாகப் பல்வேறு மாற்றங்களைப் பெற்றது. ஆனால் சில பண்பாட்டுக் கூறுகள் மட்டும் தொடக்கக் கால வழிபாட்டு எச்சத்தைக் கொண்டு பிற்காலங்களில் பின்பற்றப்பட்டுள்ளன. அவற்றை மானுடவியலாளர்கள் எஞ்சி நிலைத்தவை என்கின்றனர். அதுபோன்ற எஞ்சி நிலைத்தக் காரணிகள் திருப்பரங்குன்றத்து வழிபாட்டிலும் காணப்படுகின்றன.

பரிபாடல் குறிப்பிடும் முருக வழிபாட்டின் தொடர்ச்சியானது இன்றும் சில மாற்றங்களுடன் காணப்படுகின்றன. திருப்பரங்குன்றத்து வழிபாடு, அதன் படிநிலை வளர்ச்சி, அதில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் இன்றும் காணப்படும் வழிபாட்டுத் தொடர்ச்சி ஆகியவற்றை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**பண்பாடு:**

மக்கள் தங்களின் அன்றாட வாழ்க்கைச் செயல்பாடுகளில் ஏற்படுத்திக் கொண்ட வளர்ச்சி நிலையே பண்பாடு எனப்படுகிறது. அது மக்களின் பண்பட்ட வாழ்க்கை முறையாக உள்ளது. அப்பண்பாடு பல்வேறு கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அதுகுறித்து, *“பண்பாடு என்றால் ஓர் இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள்,நோக்கங்கள்,இலட்சியங்கள்,வாழ்க்கை முறைகள், பழக்கவழக்கங்கள், சமூகச்சட்டங்கள், களவொழுக்கம்,கற்பொழுக்கம்,அகத்திணை புறத்திணை மரபுகள்,இலக்கிய மரபுகள், அரசியலமைப்புகள், ஆடை அணிகலன்கள், திருவிழாக்கள், உணவு, பொழுதுபோக்கு, விளையாட்டுகள் இவற்றையெல்லாம் குறிக்கும்” (தனிநாயகம் அடிகள்,2013)* என்பதாக விளக்கப்பட்டுள்ளது. இவை பல்வேறு படிநிலைகளைக் கடந்து வளர்ச்சி அடைந்து வந்துள்ளன. எனவே தான் பண்பட்ட வாழ்க்கை முறையை பண்பாடு என்கின்றனர்.

**பண்பாட்டுப் படிமலர்ச்சி:**

படிமலர்ச்சி என்பது தொடக்கத்திலிருந்து இன்றுவரை மனித செயல்பாடுகளில் அல்லது பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிப்பதாகும். பண்பாடு படிமலர்ச்சி அடைந்தாலும், சில பண்பாட்டுக் கூறுகளின் எச்சம் தொடர்ந்து, அப்பண்பாட்டில் வெளிப்படுவதை எஞ்சி நிலைத்தவை என்கின்றனர். படிமலர்ச்சிக் கோட்பாட்டில் எஞ்சி நிலைத்தவை எனும் கருத்தாக்கம் இன்றியமையாததாகும். இதனை,

*“ஒரு சமூகத்தில் சில வழக்கங்கள், நிறுவனங்கள் அல்லது சில கூறுகள் பல கட்டங்களைக் கடந்து செல்லும்போது இழக்க நேரிடும், இருப்பினும் அந்தச் செயலிழந்த கூறுகள் வருங்காலத்தில் தொடர்ந்து எடுத்துச் செல்லப்பட்டு அவற்றின் தன்மைகள் அந்த சமூகத்தின் நிகழ்வுகளில் ஏதோ ஒரு வகையில் வெளிப்படும் இயல்புடையன. அவையே எஞ்சி நிலைத்தவை ஆகும்” (பக்தவத்சல பாரதி, ப.300)*

என்று மானுடவியல் அறிஞர் டைலர் குறிப்பிட்டுள்ளதைப் பக்தவத்சல பாரதி தம் நூலில் எடுத்துக்காட்டியுள்ளார். இவரின் படிமலர்ச்சிக் கோட்பாடு சமயம் சார்ந்ததாகும். அதனை, ஆவியுலகக் கோட்பாடு, பல கடவுள் கோட்பாடு, ஒரு கடவுள் கோட்பாடு என்று மூன்று நிலைகளாகக் குறிப்பிடுகிறார். மேலும் *“ஆவியுலக நம்பிக்கையிலிருந்தே அனைத்து சமய முறைகளும்* வளர்ந்ததால், அந்நம்பிக்கையின் எச்சம் அனைத்து சமயங்களிலும் இடம்பெற்றிருக்கும்” (பக்தவத்சல பாரதி,ப.300) எனும் டைலரின் கருத்து எஞ்சி நிலைத்தவை குறித்து அறிந்து கொள்ள துணை புரிகிறது என்பதைப் பண்பாட்டு மானுடவியல் எனும் நூலின் வழி அறிய முடிகிறது.

**பண்பாட்டு மாற்றம் :**

படிநிலை வளர்ச்சியடைந்த பண்பாடானது தொடர்ந்து மாற்றங்களுக்கு உட்பட்டதாகிறது. மக்கள் புதியனவற்றைக் கற்றுக்கொண்டு, அவற்றைத் தங்கள் பண்பாட்டில் உட்புகுத்தும் பொழுது, இயல்பாகவே பண்பாடு மாற்றமடைகிறது. இப்பண்பாட்டு மாற்றம் குறித்த வரையறை பின்வருமாறு:

*“பண்பாட்டின் இயக்கத்தில் தொடர்ச்சியான மாற்றங்கள் நிகழ்கின்றன. கற்றுணர்ந்த நடத்தை முறையின் தொகுப்பாகப் பண்பாடு திகழ்வதால் மக்கள் புதியவற்றைக் கற்றுக் கொள்ளும்*

*போதெல்லாம் அவர்களின் பண்பாடும் மாற்றம் பெறுகிறது. இந்த வகையில் மாற்றத்திற்கு உட்படும் ஒவ்வொரு பண்பாடும் அது தொடர்பு கொள்ளும் அயற்பண்பாட்டுக் கூறுகளைத் தேவைக்கேற்ப மாற்றம் செய்தோ செய்யாமலோ ஏற்றுக் கொள்கிறது" (பக்தவத்சல பாரதி,பக்.330,331).*

இவ்வாறு படிநிலை வளர்ச்சியாலும், அயற்பண்பாட்டினாலும் குறிப்பிட்ட நிலத்தின் பண்பாடு மாற்றத்திற்கு உட்படுகிறது. அதுபோல் பரிபாடல் காலத்திலிருந்து இன்றுவரை திருப்பரங்குன்றத்து வழிபாட்டில் ஏற்பட்டுள்ள படிநிலை வளர்ச்சியையும், மாற்றங்களையும் படிமலர்ச்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆராயும் பொழுது அவ்வழிபாட்டின் படி மலர்ச்சியைத் தெரிந்து கொள்ள முடிகிறது. இவற்றைப் பின்வரும் பகுதி விவரிக்கின்றது.

**தொடக்க கால முருக வழிபாடு:**

இயற்கையில் இருந்து தோற்றம் பெற்ற இறைவழிபாட்டு முறைகளில் முருக வழிபாடும் ஒன்றாகும். இயற்கைப் பொருட்களுக்கும் உயிர்ப்பாற்றல் உள்ளது எனும் நம்பிக்கையானது வழிபாட்டிற்கு வழிவகுத்துள்ளது. சங்ககாலத்து மக்கள் அச்சம் தரும் உயிர்பாற்றல்களை அணங்கு, சூர், முருகு, பேய் என்று பெயரிட்டு அழைத்துள்ளனர். அவற்றிற்கு படையல் இடுவது, வழிபாடு செய்வது போன்ற நம்பிக்கைகள் தோற்றம் பெற்று கடவுள் குறித்த நம்பிக்கை வளர்ச்சியடைந்துள்ளது (தனிநாயகம் அடிகள்,ப.75). இத்தகு அச்சம் தரும் உயிர்ப்பாற்றல் மலை, காடு மற்றும் நீர்நிலைகள் போன்றவற்றில் உறைந்திருக்கின்றன என்று மக்கள் கருதியுள்ளனர். இதனை வெளிப்படுத்தும் சங்க இலக்கிய பாடல்கள் பின்வருமாறு:

*"அணங்குடை நெடுவரை" (அகம்: 22)*

*"காடும் காவும் கவின்பேறு துருத்தியும்" (முருகு: 223)*

*"பெருந்துறைப்பின் அமர்ந்து உறை அணங்கே" (நற்:155)*

*"சூர்ச்சனை" (அகம்:91)*

அச்சம் தரும் அல்லது தீங்கு தரும் உயிர்ப்பாற்றல் உள்ளது என்றால் நன்மை தருபவையும் இருக்கும் எனும் கருத்தியல் கொள்கையே வழிபாட்டிற்கு அடிப்படையாக அமைந்திருக்கின்றது. அத்தகைய நன்மை தரும் உயிர்ப்பாற்றல் மரங்களில் உறையும் எனும் கருத்தாக்கத்தின் எச்சமாக மர வழிபாட்டினைக் குறிப்பிடலாம். தமிழ்ச்சமூகம் கட்டமைத்தத் தெய்வங்கள் நிலத்தை அடிப்படையாகக் கொண்டவை. மேலும் நிலம், பொழுது என்னும் இரு நிலைகள் உயிர்ச்சூழலுக்கு முதன்மையானதாக உள்ளன. எனவே தான் தொல்காப்பியர் அவற்றை முதற்பொருளாக வைத்துள்ளார்.

*"முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்*
*இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே" (தொல். பொருள்., நூ-4)*

எனும் இந்நூற்பா முதல் பொருள் குறித்து விளக்குகின்றது. முதற் பொருளைக் குறிப்பிடும் பொழுதே, தொல்காப்பியர் நிலம் சார்ந்த தெய்வங்களையும் குறிப்பிடுகின்றார். காட்டிற்குரிய தெய்வம் மாயோன், மலைக்குரிய தெய்வம் சேயோன், மருத நிலத்திற்குரிய தெய்வம் வேந்தன், கடல் நிலத்திற்குரிய தெய்வம் வருணன் என்று தொல்காப்பியர் நிலத்தின் தன்மைக்கேற்ப தெய்வங்களைப் பட்டியலிட்டு கூறியுள்ளார். இதனை விளக்கும் தொல்காப்பிய நூற்பா பின்வருமாறு:

*"மாயோன் மேய காடுறை உலகமும்*
*சேயோன் மேய மைவரை உலகமும்*
*வேந்தன் மேய தீம்புனல் உலகமும்*

*வருணன் மெய்ய பெருமணல் உலகமும்*
*முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்*
*சொல்லிய முறையால் சொல்லவும் படுமே” (தொல்.பொருள்: நூற்-5)*

தமிழ்த் தெய்வம் குறித்து ,*“தமிழ் நிலத் தெய்வம் இவ்வுலகத்தைப் படைத்தவராக இல்லாமல் ஒரு நிலத்திற்குரியவராகப் புவிச்சூழலுக்கு உரியவராக கருதப்பட்டுள்ளது” (ஆர். பாலகிருஷ்ணன்,ப - 118)* என்பதான விளக்கமும், தொல்காப்பியரின் நானிலத் தெய்வங்களினாலும் தமிழ் மக்களின் நிலம் சார்ந்த வழிபாட்டு நம்பிக்கையைத் தெரிந்து கொள்ள முடிகிறது. நானிலத் தெய்வங்களில் சேயோன் என்னும் குறிஞ்சிக் கடவுள் செவ்வேள், முருகன் மற்றும் வேலன் என்னும் பெயர்களில் அழைக்கப்பட்டுள்ளார். பரிபாடல், திருப்பரங்குன்றத்து முருகனை செவ்வேள் எனும் பெயரில் பாடியுள்ளது. கடம்ப மரத்தடியிலும், வெறியாட்டில் வேலன் மீதும் தோன்றும் உயிர்ப்பாற்றலாகத் தொடக்கக்காலத் தமிழ் மக்களின் தெய்வ நம்பிக்கையாக, முருகக் கடவுளின் கருத்தாக்கம் வெளிப்பட்டுள்ளது. அதுபோல், *“முருகன் எனும் தமிழ்ச்சொல்லின் வேர்ச்சொல்லான முருங்கு என்பது அழித்தல், கொல்லுதல், அறுத்தல் ஆகிய பொருள்களைத் தருவதால் குறிஞ்சி மக்கள் தங்களைக் காக்கும் உயிர்ப்பாற்றலுக்கு இப்பெயரிட்டு அழைத்துள்ளனர்” (ஐராவதம் மகாதேவன், ப- 23)* எனும் கருத்து தொடக்கநிலை முருக வழிபாட்டின் தன்மையை வெளிப்படுத்துகின்றது. பின் முருகன் இயற்கையில் இருந்து மானுடப்படுத்தப்பட்டு மக்களுக்கு இணையாக அவர்களுடன் நெருக்கமான உறவு நிலையில் காணப்பட்டுள்ள நிலையை சங்க இலக்கியங்களில் காண முடிகிறது. அத்தகைய நிலையை விவரிக்கும் பாடல் பின்வருமாறு:

*“வேலன் வேண்ட வெறிமனை*
*வந்தோய்!*
*கடவுள் ஆயினும் ஆக!*
*மடவை மன்ற வாழிய முருகே!”(நற்: 34)*

இந்நற்றிணைப் பாடல் தலைவியின் நோய்க்கு முருகன் காரணமில்லை என்பதை அறிந்திருந்தும், வெறியாட்டு நிகழ்வில் வேலன் அழைத்ததும் வந்ததால் முருகனைக், கடவுளாக இருந்தாலும் நீ முட்டாளாக இருக்கின்றாய், என்று தலைவி கூறுவது, தெய்வமும் மக்களும் ஒன்றிணைந்துள்ள தன்மையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. எனவே, தெய்வம் நிலத்திற்குரியதாகவும், மக்களுக்கு உரிமை உடையதாகவும் கருதப்பட்டுள்ளது என்பதற்கு மேற்கூறிய பாடல் சான்றாகின்றது. அதுபோல், மரம் மற்றும் வேலன் மீது காணப்பட்ட முருகன் எனும் தெய்வ ஆற்றல் மக்களுடன் ஒன்றிணைந்து பின் கோயிலில் உறையும் கடவுளாக வளர்ச்சியடைந்துள்ளது. இவ்வளர்ச்சியானது உருவ வழிபாடாகவும், பல்வேறு நம்பிக்கைகள் மற்றும் வழிபாட்டு முறைகளாகவும் படிப்படியாகத் தோற்றம் பெற்றுள்ளன. பரிபாடலில் இத்தகைய வளர்ச்சியடைந்த வழிபாட்டு முறைகளும், தொன்மை வழிபாடும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**கடம்பமர வழிபாடும் வேல் வழிபாடும்:**

மரவழிபாட்டின் தொடர்ச்சியாகக் கடம்ப மர வழிபாடு இருந்துள்ளது. குறிப்பாகப் பரிபாடலில் முருகன் எனும் தெய்வ ஆற்றல் கடம்ப மரத்தில் இருப்பதான நம்பிக்கை வெளிப்பட்டுள்ளது.

*“புலவரை அறியாத புகழ்பூத்த கடம்பமர்ந்து”* (பரி-19: 2)

Copyright © Author(s), DOI: https://doi.org/10.63300/kijts06022026 

இப்பாடல் வரி, கடம்ப மரத்தின் அடியில் முருகன் உறைவதாகக் குறிப்பிடுகிறது. மேலும் *“மர வழிபாடும், வேல் வழிபாடும் உருவ வழிபாட்டிற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியவை என்பதை மானிடவியலார்கள் விளக்கியுள்ளனர். இவ்விரு வழிபாடுகளிலும் மக்கள் எவ்வெவ்வரங்களை வேண்டினர் என்பதைத் தொகுத்து, அக்கால மக்களின் கருத்து வளர்ச்சியையும், கடவுளுக்கும் மக்களது வாழ்க்கைக்கும் எத்தகைய தொடர்பு இருந்ததாக அவர்கள் கருதினார்கள் என்பதையும் அறிந்து கொள்ள முடிகின்றது” (நா.வானமாமலை,ப.34)* என்பதால் வழிபாட்டினை அடிப்படையாகக் கொண்டு அம்மக்களின் வளர்ச்சிநிலையை அறிந்து கொள்ளலாம். கடம்ப மர வழிபாடு வேலனால் நடத்தப்பட்டுள்ளது. வழிபாட்டிற்குத் தேவையான பொருட்களான கோல்விளக்கு (தீவட்டி), இசைக்கருவிகள், சந்தனம் முதலிய நறுமணப் பொருட்கள், அகிற்புகை மற்றும் கொடிகள் ஆகியவற்றை பலர் சுமந்துவர, வேலன் பூக்களுடன் இலையினை உடைய வேல் என்னும் முருகனின் ஆயுதத்தைச் சுமந்து வந்தும், கடம்ப மரத்தடியில் சந்தனம் தெளித்து, ஆட்டுக்கிடாயினைக் கட்டி வைத்து கடம்பினைப் புகழ்ந்துரைத்து இசைப் பாடி வழிபாடு நடத்தியுள்ளனர் (பொ.வே சோமசுந்தரனார்,ப.273). இதனை விவரிக்கும் பரிபாடல் பின்வருமாறு:

*“தேம்படு மலர்குழை பூந்துகில் வடிமணி*
*ஏந்திலை சுமந்து சாந்தம் விரைஇ*
*விடையரை அசைத்த மேலன் கடிமரம்*
*பரவினர் உரையோடு பண்ணிய விசையினர் ” (பரி-17:1 - 4)*

வேலனால் நடத்தப்பட்ட வேல்வழிபாட்டையும், மர வழிபாட்டையும் மக்கள் விரும்பி வழிபட்டுள்ளனர். பண்டைய முருக வழிபாட்டின் தொடர்ச்சியாகக் காணப்படும் கடம்பமர வழிபாட்டை போன்று, வேல் வழிபாட்டின் தொடர்ச்சியையும் பரிபாடலில் காண முடிகிறது. தமிழ் மக்கள் முருகனை வழிபடும் பொழுது,அதில் ‘வேல்’ முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் தாம் கூறுவது உண்மை என்பதற்காக எதன் மீதாவது ஆணை இடுவது வழக்கமாக இருந்துள்ளது. அவ்வகையில் மதுரை மக்கள் குன்றின் மீதும் வேலின் மீதும் ஆணையிட்டுள்ளனர். அதிலும் பொய்யாக முருகன் மீது சூளுரைத்தால் ஏற்படும் துன்பம் குறித்து தோழி தலைவனிடம் கூறுவதாக அமையப்பெற்ற பரிபாடலில், *“எனக்கு அருள்புரிவதாகச் சொல்லித் திருவருளுடைய முருகன் மீது சூள் உரைப்பாயானால், பொய்ச்சூள் கூறிய உன்னை, அம்முருகனைச் சேர்ந்த அருளில்லாத தெய்வங்களுடனே அவனது உண்மைத்தன்மை வாய்ந்த வேற்படையும் பெரிதும் வருந்தும். நீ ஆணையிடுவதாயின் அந்தணர் அடிதொட்டு ஆணை கூறினும் கூறுக, வெற்றியை விரும்பும் முருகன் ஊர்ந்து செல்லும் மயில் மீதும், அவன் ஏந்திய வேற்படையின் ஒளி மீதும் ஆணையிடாதே” (சாரங்கபாணி,ப.136)* என்று கூறுவதால் வேல் மீது மக்கள் கொண்டுள்ள உண்மையான நம்பிக்கை வெளிப்படுகிறது. இதனை,

*“என்னை அருளி அருள்முருகு சூள்சூளின்*
*நின்னை அருளில் அணங்கால்மெய் வேல்தின்னும்*
*விறல் வெய்யோன் ஊர்மயில், வேல்நிழல், நோக்கி*
*அறவர் அடிதொடினும் ஆங்கவை சூளேல்” (பரி-8: 65-68)*

எனும் பரிபாடல் விளக்குகிறது. மேலும் விரும்பத்தகும் வேலினை உடையவன் (பரி-9:79) மாமரத்தை அறுத்த வேலினை உடையவன் (பரி-9:70) என்பதாக வேல் முதன்மைப்படுத்தப்பட்டு, முருகன் அழைக்கப்படுவது வேல் வழிபாட்டோடு தொடர்புடையதாகும்.

இவ்வேல் வழிபாடு வேலன் எடுக்கும் வெறியாட்டு நிகழ்வில் காணப்படுவதும், வேல் மீது ஆணையிடுவதும் தொன்மை வழிபாட்டின் தொடர்ச்சியாகும். பரிபாடலில் குறிப்பிடப்படும் வேல் வழிபாடும், திருப்பரங்குன்றத்து முருகன் திருவிழாவும் இன்று, குன்றின் மேல் முருகனுக்கு வேல் எடுக்கும் திருவிழாவுடன் ஒத்திருக்கின்றன. இவ்விழாவினைத் திருப்பரங்குன்றத்தைச் சுற்றியுள்ள ஏழு கண்மாய் ஊர்களைச் சேர்ந்த கிராம மக்கள் நடத்துகின்றனர். இது குறித்து,

*“கீழ் குடைவரைக் கோயிலுள்ள முருகப்பெருமானின் கையில் உள்ள வேல் ஆண்டுக்கொரு முறை புரட்டாசித் திங்களில் மலையுச்சியில் உள்ள காசி விஸ்வநாதர் கோயில் அமைந்துள்ள இடத்திற்குக் கொண்டுவரப்பட்டு பலராலும் வணங்கப்படுகிறது” (செ.போசு,பக்.131,132)*

என்று வரலாற்று அறிஞர் கூறியுள்ளார். இவ்விழாவானது இன்று கிராம மக்கள் சார்பில் விவசாயம் செழிக்க வேண்டியும், நக்கீரரின் சாபம் தீர்க்கப்பட்டதை நினைவு கூறும் வகையிலும் கொண்டாடப்படுகின்றது. அலங்கரிக்கப்பட்ட வேல் பல்லக்கில் வைத்து மலை மேல் உள்ள சுனைக்குக் கொண்டு செல்லப்பட்டு வழிபாடு நடைபெறுகின்றது. பின் கதம்ப சாதம் அனைவருக்கும் வழங்கப்படுகிறது (இணையச்செய்தி,மாலைமலர்). எனவே பரிபாடல் காலத்திலிருந்து இன்றுவரை வேல் வழிபாடு முதன்மைப் பெற்றுள்ளது என்பதை மேற்கூறிய கருத்துக்கள் வழியாக அறிய முடிகிறது.

**பரிபாடலில் முருக வழிபாடு:**

பரிபாடலில், திருப்பரங்குன்றத்தில் வழக்கிலிருந்த முருக வழிபாட்டின் வளர்ச்சிநிலையைக் காண முடிகிறது. முருகன், கடம்ப மரத்தடியில் உறையும் ஆற்றலாகவும், வேலன் மீதேறி வரும் ஆற்றலாகவும் இருக்கும் கடவுள் என்ற நிலையிலிருந்து மாறி, காலப்போக்கில் கோயிலில் குடியிருக்கும் உயர்நிலைக் கடவுளாக நிலைபெற்றக் காலகட்டத்தில் பரிபாடல் படைக்கப்பட்டுள்ளது. இதில் இருவகை முருக வழிபாடு கூறப்பட்டுள்ளதாக நா.வானமாமலை குறிப்பிடுகின்றார். அவரின் கூற்று,


*“பரிபாடலில் இருவகை முருக வழிபாடு கூறப்பட்டுள்ளது. ஒன்று வேலன் வெறியாட மக்கள் கடம்ப மரத்தையும் வேலையும் வழிபடுவது, மற்றொன்று கோயில் வழிபாடு” (நா.வானமாமலை, ப.34)* என்பதாகும். இவ்வழிபாட்டு முறைகளோடு அயற்பண்பாட்டுக் கூறுகள் இணையும் பொழுது சில மாற்றங்கள் நிகழ்கின்றன. இதனை,

*“மக்கள் ஓர் அயற்பண்பாட்டுக் கூறின் சிறப்புத் தன்மையின்பால் கவரப்பெற்று அத்தூண்டுதல் பேரில் தம் சொந்த பண்பாட்டில் சில மாற்றங்களுடன் அதை ஏற்றுக்கொள்வர்” (பக்தவத்சல பாரதி, ப.336)*

எனும் கருத்தாக்கம் தெளிவுபடுத்துகின்றது. தமிழ் மரபிலும் இத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. திருப்பரங்குன்றத்தின் முருக வழிபாடு குறித்துப் பேசும் பரிபாடல், அயற்பண்பாட்டிலுள்ள சில புராணக் கதைகள் முருக வழிபாட்டோடு இணைந்திருப்பதையும் குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாகக் *“கோயில் வழிபாடு, முருகன் பிறப்புக் கதைகள், வடமொழிப் புராணக் கதைகளில் உள்ள ஸ்கந்தனும், முருகனும் தமிழ் மக்கள் பண்பாட்டில் இணையப் பெற்ற பின் எழுந்த கருத்தாகும்” (நா.வானமாமலை,ப.32)* என்பதால் தமிழர் வழிபாட்டு மரபினை அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் முருகனிடம் தமிழ் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையும், வழிபாட்டு முறையும் தமிழர் மரபாகவே காணப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாகத் தொன்மையான முருக வழிபாட்டின் தொடர்ச்சியான கடம்ப மரவழிபாடும், வேல் வழிபாடும் அமைந்துள்ளன. மேலும் முருகனிடம் மக்கள் வேண்டுவன வீடுபேறு என்பதாக அல்லாமல், உலக இன்பத்தைப் பெறுவதற்கான வழிபாடாக

இருந்துள்ளது. இவைத் தமிழர்களோடு தொடர்புடையவனவாகும். எனவே சில அயற்பண்பாட்டுப் புராணக் கதைகள் முருக வழிபாட்டில் உள் நுழைந்திருந்தாலும் மக்களின் நம்பிக்கைகளும், மரபும் மாற்றம் பெற்றிருக்கவில்லை என்பது பரிபாடல் வழியாக புலனாகிறது.




வழிபாடாகவும் வளர்ச்சி அடைந்த முருக வழிபாட்டின் எச்சங்கள் பரிபாடலில் வெளிப்பட்டுள்ளன. வெறியாட்டில் வணங்கப்பட்ட வேல் குறித்த நம்பிக்கையின் தொடர்ச்சி பரிபாடல் காலத்திலும் காணப்பட்டுள்ளது. அதுபோன்று, அதற்குப் பிந்தைய காலத்திலிருந்து இன்று வரை, குன்றின் மேல் முருகனுக்கு வேல் எடுக்கும் திருவிழாவாகத் தொடர்ந்து வந்து எஞ்சி நிலைத்தவையாகத் திருப்பரங்குன்றத்தில் கொண்டாடப்படுகிறது.

**திருப்பரங்குன்றமும் தெய்வங்களும்:**

கி.பி.2 க்குப் பிறகு நிகழ்ந்த அரசியல் மாற்றங்கள், சங்க காலத் தமிழர் பண்பாட்டில் குறிப்பிடத்தகுந்தத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. கி.பி.3 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட களப்பிரர் ஆட்சியில் சமணம் மற்றும் பௌத்தம் சார்ந்தக் கொள்கைகள் மேலெழுந்து, சங்ககால வழிபாட்டு முறைகளில் மாற்றம் ஏற்பட காரணமாய் இருந்திருக்கின்றன. இதுகுறித்து,

*“கி.பி 3 முதல் கி.பி 6 வரை களப்பிரர் ஆட்சி, தமிழக வரலாற்றில் அரசியல், சமூக, சமய, கலாச்சார வாழ்வில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன” (ஸ்ரீதர்,ப.21)*


என்பதாக வரலாற்று ஆய்வாளர் கூறுவது நோக்கத்தக்கதாகும். மேலும் வேள்விக்குடிச் செப்பேடு மற்றும் தளவாய்புரச் செப்பேடு ஆகியவைக் களப்பிரர் ஆட்சியைப் பற்றி குறிப்பிடும் சான்றுகளாகும் (செ.போசு,ப.60). இக்காலகட்டத்தில் சமணம் செல்வாக்குடன் இருந்ததற்குக் கி.பி. 470 ஆம் ஆண்டு வஜ்ரநந்தி தோற்றுவித்த முதல் சமணச் சங்கம் (ஸ்ரீதர்,ப.164) சான்றாக அமைகிறது. திருப்பரங்குன்றத்தில் நிலவிய சங்க காலத்துத் தனிப்பெரும் முருக வழிபாடு களப்பிரர் ஆட்சியினால் சிறப்புக் குறைந்து, சமணம் சார்ந்த வழிபாட்டு முறைகள் வளர்ச்சியடைந்து இருந்துள்ளன. மதுரைக்காஞ்சி, சமணர் பள்ளி மதுரையிலிருந்துள்ளதைக் குறிப்பிடுகிறது (மதுரைக் காஞ்சி,பா.475-487 ). ஆனால் சங்ககாலச் சமணர் வழிபாட்டு முறைக்கான சான்றுகள்

கிடைக்கவில்லை. கி.பி 3- கி.பி 11 வரையிலான காலத்தில் சமணம் திருப்பரங்குன்றத்தில் செல்வாக்குடன் காணப்பட்டுள்ளது. அதற்குச் சான்றாகக் குகைகளில் உள்ள கல்வெட்டு மற்றும் சிற்பம் அமைந்துள்ளன (ஸ்ரீதர்,பக்.21, 164,165).

கி.பி 6-க்குப் பிறகு பாண்டியர்கள் (கடுங்கோன்) களப்பிரர் ஆட்சியைக் கைப்பற்றி மீண்டும் ஆட்சி அமைக்கின்றனர் (சதாசிவ பண்டாரத்தார்,ப.31). அவர்கள் சமண மதம் தழுவியவர்களாக இருந்துள்ளனர். அதற்கு, கி.பி.7 ஆம் நூற்றாண்டில் மாறவர்மன் அரிகேசரி எனும் கூன்பாண்டியனை, திருஞானசம்பந்தர் சமணத்தில் இருந்து சைவத்திற்கு மாற்றிய நிகழ்வினைச் சான்றாகக் கூறலாம் (சதாசிவ பண்டாரத்தார்,ப.33). பக்தி இயக்க வளர்ச்சி நிலையின் காரணமாகத் தமிழக வரலாற்றில் அரசியல் மற்றும் சமய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இதில் சிவபெருமான் முதன்மைக் கடவுளாக வணங்கப்பட்டுள்ளார். இதற்கு, *"பக்தி இயக்கத்தின் வளர்ச்சிக்குக் காரணமாகத் தமிழ்நாட்டில் நிகழ்ந்த வரலாற்றுப்போக்கு நிலவுடைமையின் வளர்ச்சியாகும். சிவபெருமான் நிலவுடைமையோடு சேர்ந்த தெய்வமாக்கப்பட்டான்"(தொ.பரமசிவன்,ப.184)* எனும் கருத்து வலுசேர்க்கிறது. எனவே, மன்னர்கள் சிவனை வழிபட்டும், கோவில் எழுப்பியும் சைவத்தை வளர்த்துள்ளது தெளிவாகிறது. இம்மாற்றம் திருப்பரங்குன்றத்திலும் வெளிப்பட்டுள்ளது. கி.பி.8 ஆம் நூற்றாண்டில் (கி.பி 773) பராந்தக நெடுஞ்சடையன் வரகுணன் எனும் பாண்டிய மன்னனின் படை தளபதி சாத்தன் கணபதி என்பான் திருப்பரங்குன்றத்தில் குடைவரைக் கோயிலை எழுப்பியுள்ளான் (ஸ்ரீதர்,ப.101, செ.போசு,ப.5). இது சிவனுக்குரிய கோயில் என்று அங்குக் காணப்படும் கல்வெட்டு குறிப்பிடுகிறது (செ.போசு,ப-5). அக்குன்றில் இன்று வழிபாட்டிலுள்ள முருகன் கோயில் (குடைவரை) கி.பி 8-ல் தோற்றுவிக்கப்பட்டதாகும். கி.பி 8 – லிருந்து கி.பி 13 வரை மதுரையில் ஏற்பட்ட பாண்டியர் மற்றும் சோழர் ஆட்சியால் சைவமும் வைணவமும் வளர்ச்சி அடைந்துள்ளன (ஸ்ரீதர்,பக்.27,43). இக்காலகட்டத்தில் திருப்பரங்குன்றத்தில் சிவன் மற்றும் பெருமாள் பெருந்தெய்வமாகவும், முருகன் சிறுதெய்வமாகவும் குடைவரைக் கோயிலில் வழிபடப்பட்டுள்ளனர் (ஸ்ரீதர்,ப.100). அதுபோல் கி.பி.8 ஆம் நூற்றாண்டில் குன்றத்தின் தென்புறத்தில் அம்மன் கோயில் கட்டப்பட்டுள்ளது. இன்று இது உமையாண்டார் கோயில் என்று அழைக்கப்படுகின்றது (ஸ்ரீதர்,ப.101). எனவே கி.பி.8 லிருந்து கி.பி.13,14 வரையில் சிவன் பெருந்தெய்வமாக வழிபடப்பட்டுள்ளது தெளிவாகிறது.

திருப்பரங்குன்றத்தில் சிவன் வழிபடப்பட்டதைக் கல்வெட்டுகளில் இருந்து மட்டுமல்லாது இலக்கியங்கள் வழியாகவும் அறிய முடிகிறது. தேவாரத்தில் சம்பந்தர் (கி.பி. 7) மற்றும் சுந்தரர் (கி.பி. 8) (சேர,சோழ,பாண்டியருடன் வழிபடல்) ஆகியோர் சிவனையும், திருக்கோவையாரில் மாணிக்கவாசகர் (கி.பி. 9) உமைபங்கன் மற்றும் முருகவேள் ஆகியோரையும், பெரிய புராணத்தில் சேக்கிழார் (கி.பி.12) சிவனை வழிபட்ட சுந்தரரையும் தம் நூல்களில் பாடியுள்ளனர். இதனால் அக்காலகட்டங்களில் சிவன் முதன்மைப் பெற்றுள்ளது புலனாகிறது. அதற்குப்பிறகு, கல்லாடம் (கி.பி 9 – கி.பி.13 இடைப்பட்டக் காலம்), கந்தபுராணம் (கி.பி.11-14க்கு இடைப்பட்டது), திருப்புகழ் (கி.பி.14), திருப்பரங்கிரிப் புராணம் (கி.பி.16), திருவிளையாடற் புராணம் (கி.பி.17) ஆகியவை முருகனைப் பாடியுள்ளன. முருகனைப் பாடிய இடைக்கால இலக்கியங்கள் முருகன், வள்ளி மற்றும் தெய்வானையுடன் இருப்பதையும், தெய்வானை திருமணத்தையும் அதிகம் பாடியுள்ளன. முருகன், வள்ளி மற்றும் தெய்வானையுடன் இருக்கும் சிற்பம் கி.பி.13-ல் கட்டப்பட்ட உமையாண்டார் கோயிலில் காணப்படுகின்றது. எனவே, சிவன் பெருந்தெய்வமாக வழிபடப்பட்டக் காலத்தில் முருகன் சிறு தெய்வமாக வள்ளி தெய்வானையுடன் வழிபடப்பட்டுள்ளது தெளிவாகிறது. ஆனால், சங்க இலக்கியங்கள் திருப்பரங்குன்றம் முருகனுக்குரியது என்கின்றன. திருமுருகாற்றுப்படை

திருப்பரங்குன்றத்தில் முருகன் வழிபாடு முதன்மையானது என்பதால், அதனை முதலில் வைத்து பாடியுள்ளது. அகநானூறு திருப்பரங்குன்றத்தின் தன்மையையும், அங்கு விழா எடுக்கப்படுவதையும், அக்குன்றம் முருகனுக்கு உரியது என்பதையும் குறிப்பிட்டுள்ளது. (அகம்.59,149). பரிபாடலும் திருப்பரங்குன்றத்து முருகனைப் பாடியுள்ளது. இதனால் திருப்பரங்குன்றம் முருகனுக்கு உரிமையுடையது என்பது புலனாகிறது. சங்ககாலத்தில் திருப்பரங்குன்றம் முருகனுக்கு உரியதாகவும், அதற்குப்பின் சிவனுக்கும் முருகனுக்கும் உரியதாகவும், தற்காலத்தில் முருகனுக்குரியதாகவும் காணப்படுகிறது. குன்றம் முருகனுக்குரியது எனும் தமிழ் மரபினை மக்கள் பின்பற்றியதால் மதுரையில் ஏற்பட்ட பல்வேறு அரசியல் மாற்றங்களால் திருப்பரங்குன்றம் பல தெய்வங்களுக்குரிய இருப்பிடமாக இருப்பினும், இன்றுவரை முருகப் பெருமானுக்குரியதாகக் காணப்படுகிறது.





**கோயிலும் நம்பிக்கைகளும்:**

சமூக அரசியல் மாற்றங்களால் திருப்பரங்குன்றம் பல்வேறு தெய்வங்களுக்கான இருப்பிடமாகத் திகழ்கின்றது. அங்கு முருகன், சிவன், பவழக்கனிவாய் பெருமாள், துர்க்கை, விநாயகர், ஆவுடைநாயகியம்மன் மற்றும் சோமாஸ்கந்தர் (செ.போசு,பக்.5,6,62,64) போன்ற தெய்வங்கள் காணப்படுகின்றன. மேலும் கி.பி.14 க்குப் பிறகு இஸ்லாமியர் வழிபடும் தெய்வமும் அங்கு நிறுவப்பட்டது (ஸ்ரீதர்,ப.51). இவ்வாறு பல்வேறு தெய்வங்கள் இடம்பெறும் திருப்பரங்குன்றத்தில், இன்று வழிபடப்படும் முருகன் கோயில் கி.பி.8-ல் கட்டப்பட்ட சிவனுக்குரிய குடைவரைக் கோயில் ஆகும். கி.பி 8 லிருந்து கிட்டதட்ட கி.பி.13,14 வரை அது சிவன் கோயிலாக இருந்துள்ளது. பின் கி.பி.13-க்குப் பிறகு சிறிது சிறிதாக முருகன் கோயிலாக மாற்றப்பட்டுள்ளது. (செ.போசு,ப.6). இதற்கு இக்காலகட்டத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாயிருந்துள்ளது. விஜயநகர ஆட்சியிலும் (கி.பி.14–கி.பி.16), நாயக்கர் ஆட்சியிலும் (கி.பி.16–18) கோயில் திருப்பணிகள் அதிகம் நடைபெற்றுள்ளன (ஸ்ரீதர்,பக்.55,67,101). அவர்கள் ஆட்சியில் திருப்பரங்குன்றத்திலும் பல்வேறு திருப்பணிகள் நிகழ்ந்துள்ளன (செ.போசு,ப.94). திருப்பரங்குன்றம் முருகனுக்குரியது எனும் பண்டைய மரபின் அடிப்படையில், சிவன் கோயிலாக சிறப்புப்

பெற்றிருந்தக் குடைவரைக் கோயில் முருகன் கோயிலாக மாற்றப்பட்டுள்ளதை நோக்கும்பொழுது, சங்க காலம் தொட்டு, கி.பி-13 வரையிலான காலகட்டத்தில் முருகன் கோயில் எதுவாக இருந்திருக்கும் என்ற வினா எழுகிறது. இன்றைய முருகன் கோயில் கி.பி 8 முதல் 13 வரை சிவன் கோயிலாக இருந்திருக்கின்றது எனும் பொழுது, மலை மீதுள்ள காசி விஸ்வநாதர் கோயில் சங்ககால முருகன் கோயிலாக இருந்திருக்க வாய்ப்புள்ளது என்பதற்கு பரிபாடல் சான்றாக விளங்குகின்றது. சங்ககால திருப்பரங்குன்ற விழாவில் சுனையாடல் (பரி.8,109-123) கலைப்போட்டி (பரி.9,70-78) போன்ற நிகழ்வுகள் மலையின் மீது நிகழ்ந்துள்ளன. மேலும் பாண்டிய மன்னன் தன் மனைவிமார்கள், அமைச்சர்கள் மற்றும் நாட்டு நகர மக்கள் ஆகியோருடன் மலை மீது ஏறிச் சென்று அங்குள்ள முருகன் கோயிலை வலம் வந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. எனவே பாண்டியனும், மக்களும் மலை மீது இருந்த முருகன் கோயிலுக்குச் சென்றுள்ளது தெளிவாகிறது. இதனை விவரிக்கும் பரிபாடல் வரிகள்,

*"சுடரோடு சூழ்வரு தாரகை மேருப்*
*புடைவரு சூழல் புலமாண் வழுதி*
*மடமயி லோரு மனையவ ரோடும்*
*கடனறி காரியக் கண்ணவ ரோடு நின்*
*சூருறை குன்றிற் நடவரை யேறிமேற்*
*பாடு வலந்திரி பண்பாற் பழமதிற்*
*சூடி யசையுஞ் சுவன்மிசைத் தானையிற்*
*பாடிய நாவிற் பரந்த வுவகையின்*
*நாடு நகரு மடைய அடைந்தனைத்தே*
*படுமணி யானை நெடியோய் நீ மேய*
*கடி நகர் சூழ் நுவலுங் கால்"* *(பரி,19,19-29)*

என்பதாக அமைந்துள்ளது. இதற்கு, *"அறிவு மாட்சிமைப்பட்ட பாண்டியன், தன் மனைவிமாரோடும், அமைச்சரோடும் கூடி, நாட்டிலுள்ளோரும், நகரத்திலுள்ளோரும் வந்து தன்னைச் சூழா நிற்ப, திருப்பரங்குன்றினது பெரிய சிகரத்தின் மேலே ஏறி, பெருமையுண்டாக வலமாக வருகின்ற பண்பினோடே நீ எழுந்தருளிய திருக்கோயிலைச் சுற்றுதல்" (பொ.வே. சோமசுந்தரனார்,ப- 303)* என்பதாக உரை வகுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பரிபாடல் மலை மீதுள்ள கோயிலில் திருவிழா நிகழ்ச்சிகள் நடந்துள்ளதைப் பதிவு செய்துள்ளது.



இன்றும் திருப்பரங்குன்றத்தில் சங்க கால முருக வழிபாடு காணப்படுகின்றது. காலமாற்றத்தால் முருகன் இருக்கும் இடம் மாறியிருக்கிறது. முருக வழிபாடு மாற்றமடையவில்லை. அதேபோல் முருகன் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைத் தொடர்ந்து காணப்படுகின்றது. வழிபாட்டில் முதன்மையானது நம்பிக்கையும், அது சார்ந்து தெய்வத்திடம் வேண்டுதலும் என்பதால் மக்கள் முருகனையும், குன்றையும் வாழ்த்தி தங்களின் வழிபாட்டை மேற்கொண்டுள்ளனர். அவற்றுள் தலைவன் தலைவி ஆகியோரின் பிரிவுத் துன்பத்தை நீக்கும் கடவுளாக முருகன் இருக்கின்றான் என்பது திருப்பரங்குன்ற வழிபாட்டின் நம்பிக்கையாக இருந்துள்ளது. பரிபாடலில் இந்நம்பிக்கை, பொருள் ஈட்டப் பிரிந்து சென்ற தம் கணவருக்குப் பொருள் கிடைக்கும் பொருட்டும், பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வருதல் பொருட்டும், அவ்வாறு வந்த பிறகு, என்றும் பிரியாமல் இருத்தல் பொருட்டும் வேண்டுவதாக அமைந்துள்ளது. இவை நிறைவேறினால் முருகனுக்கு விழா எடுப்பதாகவும், மதுரை மக்களுக்கு விருந்து அளிப்பதாகவும் வேண்டுதலாகிய இத்தகைய செயல்பாடுகள் முருகன் மீதான அம்மக்களின் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன. இவற்றை தெரிவிக்கும் பரிபாடல் பின்வருமாறு அமைந்துள்ளது.

*"தெய்வ விழவும் திருந்து விருந்தயர்வும்*
*அவ்வெள் மருவி அணிபரங் குன்றிற்கும்*
*தொய்யா விழுச்சீர் வளங்கெழு வையைக்கும்*
*கொய்உளை மான்தேர்க் கொடித்தேரான் கூடற்கும்*
*கை ஊழ் தடுமாற்றம் நன்று" (பரி-17: 42-46)*

பரிபாடல் மட்டுமல்லாமல் பிற சங்க இலக்கியங்களான அகநானூறும் (59) கலித்தொகையும் (பாலை.27,93), திருப்பரங்குன்றம் குறித்து பாடும் பொழுது பிரிவினைப் பின்புலமாக வைத்து, அதனால் வரும் துன்பத்தை நீக்கும் இடமாக திருப்பரங்குன்றம் விளங்குகிறது என்று குறிப்பிட்டுள்ளன. மேலும் தனக்கு நல்ல கணவன் அமையவும் (பரி.19,90-92), குழந்தைப் பேறு வேண்டியும் பெண்கள் (பரி.8.106) முருகனை வேண்டியுள்ளனர். இதனால் மக்கள் உலகியல் பயன்களைப் பெற முருகனை வழிபட்டுள்ளனர் என்பது தெளிவாகிறது. இதனை,

*"இன்ப நுகர்ச்சியும் தெய்வ வழிபாடும் பரிபாடலில் முரண்பாடு உடையவையல்ல, இன்ப நுகர்ச்சி நீடிக்கவும், உலகியல் பயன்களைப் பெறவுமே மக்கள் வழிபாடு செய்கின்றார்கள். முருக வணக்கம், பிரிந்த காதலரைச் சேர்த்து வைக்கும் என்ற நம்பிக்கை, அக்காலத்தில் இருந்ததென்று இக்குறிப்பு உணர்த்துகிறது" (நா. வானமாமலை,ப.40)*

எனும் கருத்து மேலும் தெளிவுபடுத்துகிறது. அதுபோல், இன்றுள்ள வழிபாட்டில் பல நம்பிக்கைகள் உள்ளன. அதில், *"முருகனின் குடைவரைக் கோயிலில் காணப்படும் சோமாஸ்கந்தர் உருவத்தை வழிபட்டால் கணவனும், மனைவியும் மக்கள் பேற்றுடன் இனிய குடும்ப வாழ்வைப் பெறுவார்கள்" (செ.போசு,ப.64)* எனும் நம்பிக்கையும் காணப்படுகிறது. இன்றும் மக்கள் நல்ல திருமண வாழ்க்கை அமைய வேண்டி முருகனை வழிபடுகின்றனர். எனவே திருப்பரங்குன்றத்து கோயில்களிலுள்ள தெய்வங்கள் இடம்மாறியிருந்தாலும், தமிழர் மரபுகளில் ஒன்றான இல்லற நெறிக்குரிய உலகியல் பயன்களை வழங்கும் கடவுளாக முருகன் காணப்படுகிறான் எனும் மக்களின் நம்பிக்கை இன்றளவும் தொடர்வதைக் காண முடிகிறது.

Copyright © Author(s), DOI: https://doi.org/10.63300/kijts06022026

இத்தகைய வழிபாட்டு முறைகள் போன்றே அக்குன்றில் வாழும் குரங்குகளுக்குத் தின்பண்டங்கள் வழங்கும் முற்காலப் பழக்கம் இன்றும் தொடர்கின்றது. பரிபாடலில் மக்கள் குரங்குகளுக்குக் கரும்பும், பண்டங்களும் வழங்கியதாகக் கூறப்பட்டுள்ளது (பரி.19.38,39). அது போன்று மக்கள் இன்றும், மலை மீதுள்ள காசி விஸ்வநாதர் கோயிலுக்கு அருகில் குரங்குகளுக்கு அரிசி, பொறி மற்றும் கடலை போன்ற உணவுப் பொருட்களை வழங்கும் நிகழ்வு காணப்படுகிறது.

கடம்ப மரத்தடியில், வெறியாட்டு நிகழ்விற்கு ஆடு பலியிடும் தொன்மைப் பழக்கம், இன்று ஆடு, கோழி போன்றவற்றைக் காணிக்கையாகச் செலுத்தும் பண்பாடாக மாறியிருக்கிறது. இவ்வாறு மக்களின் நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் திருப்பரங்குன்றத்து வழிபாட்டில் தொடர்ந்து இருந்து வருகின்றன. மேலும் இல்லற நெறி எனும் உலகியல் பயனைப் பெற முருகனிடம் வேண்டிய சங்கப் பெண்கள் முருகனுக்கு விழா எடுப்பதாகவும், விருந்து அளிப்பதாகவும் கூறிய நம்பிக்கையானது, இன்று வேல் எடுக்கும் விழாவாகவும், கதம்ப சாதம் வழங்கும் நிகழ்வாகவும் காணப்படுகிறது. திருப்பரங்குன்றத்து வழிபாட்டில் எஞ்சி நிலைத்தவையாக, வேல் எடுக்கும் விழா, குரங்குகளுக்கு பண்டங்கள் தரும் பழக்கம், ஆடு, கோழி போன்றவற்றைக் காணிக்கையாகச் செலுத்துதல் போன்றவை இன்றும் தொடர்ந்து மக்களால் பின்பற்றப்படுகின்றன.

**தொகுப்புரை:**

ஒவ்வொரு காலகட்டத்திலும் சமயம் சார்ந்த பண்பாட்டுக் கூறுகள் வளர்ச்சியடைந்து வந்துள்ளன. வளர்ச்சியின் காரணமாகத் தொடக்கத்தில் இருந்த பண்பாடு, தொடர்ந்து மாற்றமடைகிறது. இருப்பினும் சில சமய நம்பிக்கைகள் அப்பண்பாட்டில் எச்சமாகக் காணப்படுகின்றன. இவ்வாறு எஞ்சி நிலைத்தப் பண்பாட்டுக் கூறுகள் திருப்பரங்குன்றத்து வழிபாட்டில் இன்று வரை பின்பற்றப்பட்டுள்ளன.

தொடக்க காலங்களில் இறைவழிபாடு என்பது அச்சம் தரும் உயிர்ப்பாற்றல் மற்றும் நன்மை தரும் உயிர்ப்பாற்றல் எனும் நிலையில் இருந்தது. பின் அது படிப்படியாக வளர்ச்சியடைந்து உருவ வழிபாடாக மாற்றமடைந்தது. அதுபோல் திருப்பரங்குன்றத்து வழிபாடும் வளர்ச்சியடைந்தது. குன்றத்து வழிபாட்டில் முதன்மைப் பெறும் முருகனின் ஆற்றல் மரத்திலும் வேலிலும் இருப்பதாக மக்கள் நம்பியதால், அது கடம்பமர வழிபாடாகவும், வேல் வழிபாடாகவும் அடுத்த நிலைக்கு மாறியது. பிற்காலத்தில் தோன்றிய உருவ வழிபாடு, கோயில் வழிபாடு போன்றவற்றால் மக்கள், முருகனை திருப்பரங்குன்றத்து உயர்நிலைக் கடவுளாக கோயிலில் நிலைநிறுத்தியுள்ளனர். பரிபாடலில் கோயில் வழிபாடும், கடம்பமரம் மற்றும் வேல் வழிபாடும் பேசப்பட்டுள்ளதால் சங்க காலத்திலிருந்த வழிபாட்டுப் படிநிலையை அறிந்து கொள்ள முடிகிறது.

திருப்பரங்குன்றத்தில் முருகன் கடவுளாக நிலை பெற்ற காலத்திற்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் அக்குன்றினை, கி.பி 3 லிருந்து கி.பி 14 வரை பல்வேறு தெய்வங்களுக்குரிய வழிபாட்டுத் தலமாக மாற்றியுள்ளது. தொன்று தொட்டு வரும் முருக வழிபாட்டின்படி சங்ககாலத்தில் திருப்பரங்குன்றம் முருகனுக்குரியதாகவும், அதற்குப்பின் சிவனுக்குரியதாகவும், தற்காலத்தில் முருகனுக்குரியதாகவும் காணப்படுகிறது. மேலும் கி.பி 8 லிருந்து கி.பி 13,14 வரை சிவன் கோயிலாக இருந்த குடைவரை, அதன் பிறகு முருகன் கோயிலாக மாறும்பொழுது, முருகன் கோயில் சிவன் கோயிலாக மாறியிருக்கலாம் என்று கருதப்பட்டுள்ளது. அதுபோல் துர்க்கை, விநாயகர், பெருமாள் மற்றும் இஸ்லாமியர் மசூதி என்று பல்வேறு தெய்வங்களை வழிபடும் இடமாக திருப்பரங்குன்றம் வளர்ச்சியடைந்துள்ளது.

வழிபாடு சார்ந்த மக்களின் நம்பிக்கைகள் இன்றும் காணப்படுகின்றன. திருப்பரங்குன்றத்து முருகனை வழிபட்டால் இல்லற வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருக்கலாம் எனும் நம்பிக்கை சங்க

காலத்தில் இருந்து இன்று வரை தொடர்ந்து வந்துள்ளது. அதுபோல் குரங்குகளுக்குத் தின்பண்டங்கள் வழங்கும் பழக்கமும் தொடர்ந்து பின்பற்றப்படுகிறது. மக்கள் எடுத்த விழாவும், விருந்தோம்பலும், வேலன் வெறியாட்டு வேல் வழிபாடும், இன்றைய காலத்தில் வேல் எடுக்கும் திருவிழாவாகவும், அவ்விழாவில் கதம்பசாதம் வழங்கும் நிகழ்வாகவும் தொடர்ந்து வந்துள்ளன. இது திருப்பரங்குன்றத்து வழிபாட்டில் காணப்பட்ட எஞ்சி நிலைத்த பண்பாடாக வெளிப்பட்டுள்ளது இக்கட்டுரை வழியாக ஆராயப்பட்டுள்ளது.

தமிழ்ப் பண்பாட்டில் காணப்பட்ட பல்வேறு அரசியல் மாற்றங்களாலும், சமய வளர்ச்சியாலும் (சைவம், வைணவம், சமணம், பௌத்தம்) திருப்பரங்குன்றத்து கோயிலில் மாற்றத்தை ஏற்படுத்த முடிந்துள்ளது. இத்தகைய சமூகக் காரணிகளால் கோயிலிலிருந்து முருகனை இடமாற்றம் செய்ய முடிந்துள்ளது. புராணக் கதைகளை உட்புகுத்தி முருகனின் வரலாற்றைக் கூற முடிந்துள்ளது. ஆனால் திருப்பரங்குன்றம் முருகனுக்கு உரியது என்பதையும், தொல் மரபின் எச்சமான மரம் மற்றும் வேல் வழிபாட்டின் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் பழக்க வழக்கங்களையும் சமூகக் காரணிகளால் மாற்ற முடியவில்லை என்பதனை இக்கட்டுரையின் வழி அறிய முடிகிறது.

**துணைநூற்பட்டியல் :**

[1]. பக்தவத்சல பாரதி. *பண்பாட்டு மானிடவியல்*, அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம், 2021.

[2]. தனிநாயகம் அடிகள். தமிழர் பண்பாடு (இணைய கட்டுரை ), *கீற்று* ,20,டிசம்பர் 2013, https://keetru.com

[3]. தனிநாயகம் அடிகள். *நில அமைப்பும் தமிழ்க்கவிதையும்*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2018.

[4]. செயபால். இரா (உரையாசிரியர் ). *அகநானூறு*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007

[5]. பாலகிருஷ்ணன். ஆர். *அணி நடை எருமை (சங்கச் சுரங்கம் – இரண்டாம் பத்து),* பாரதி புத்தகாலயம், சென்னை,2021.

[6]. சாரங்கபாணி. இரா. *பரிபாடல்* ,கோவிலூர் மடாலயம்,கோவிலூர் , 2003.

[7]. சோமசுந்தரனார் பொ.வே (உரையாசிரியர்). *பரிபாடல்* , சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1964.

[8]. ஸ்ரீதர்,தி.ஸ்ரீ.(ப.ஆ). *மதுரை மாவட்டத் தொல்லியல் கையேடு*, தமிழ்நாடு தொல்லியல் துறை,சென்னை, 2005.

[9]. இளம்பூரணர் (உரையாசிரியர்),சதீஷ்,அ. (பதிப்பாசிரியர்),*தொல்காப்பியம் பொருளதிகாரம்,* தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை, 2022.

[10]. வானமாமலை,நா*. தமிழர் பண்பாடும் தத்துவமும்* , பாரதி புத்தகாலயம், சென்னை, 2022.

[11]. பாலசுப்பிரமணியன், கு.வெ (உரையாசிரியர்). *நற்றிணை (மூலமும் உரையும்)* ,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை , 2017.

[12]. விசுவநாதன் ,அ (உரையாசிரியர்). *கலித்தொகை (மூலமும் உரையும்)* ,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2017.

[13]. பதிப்பாசிரியர் குழு. *பத்துப்பாட்டு* ,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் ,சென்னை, 1981.

[14]. ஐராவதம் மகாதேவன் . *சிந்துவெளிப் பண்பாடும் சங்க இலக்கியமும்* ,செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ,சென்னை, 2016 .

[15]. சதாசிவ பண்டாரத்தார், தி. வை. *பாண்டியர் வரலாறு* , ஸ்ரீ பாரதி பப்ளிகேஷன் , சென்னை, 2023.

[16]. போசு, செ. *திருப்பரங்குன்றம்* , தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, 1981.

[17]. பரமசிவன்,தொ. *பண்பாட்டு அசைவுகள்*, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2022.

[18]. இணையச் செய்தி,திருப்பரங்குன்றம் கோவிலில் மலைமேல் குமரருக்கு வேல் எடுக்கும் திருவிழா, *மாலைமலர்* , அக்டோபர் ,13,2023, https://www.maalaimalar.com.

**எழுத்தாளர் பிரகடனம் - முரண்பாடுகள் அறிக்கை (Author Declaration - Conflict of Interest Statement)**

இவ்வாய்வுக் கட்டுரையின் உள்ளடக்கத்திலோ, தரவுப் பகுப்பாய்விலோ அல்லது அதன் முடிவுகளிலோ எந்தவிதமான நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட முரண்பாடுகளும் (No Conflict of Interest) இல்லை என்று இதன் முதன்மை எழுத்தாளர் உறுதிபடப் பிரகடனம் செய்கிறார். இக்கட்டுரை முற்றிலும் கல்வி மற்றும் சமூக மேம்பாட்டு ஆராய்ச்சிக்காக மட்டுமே நடுநிலைமையோடு எழுதப்பட்டுள்ளது.